(2) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) வேளாண்மைத் துறை அரசுப் பணியாளர் தேர்தல் குறித்து.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, 57—வது விதியின்கீழ், அவசர நிர்வாக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுள்ளேன். வேளாண்மைத் துறை அரசு பணியாளர் தேர்தல் சம்பந்தப்பட்டது இது. அதன் காரணமாக, பதட்ட நிலை இருக்கிறது என்று சொல்லி உள்ளேன். தாங்களும் தொழிலாளர் நல அமைச்சரை அழைத்து இதைச் சொன்னீர்கள். அவர் சொன்னார், அந்த 'காம்பவுண்டு'க்குள்ளே, கூட்டம் நடந்தால், நான் போகமாட்டேன், நியாயம்தான், என்று. ஆனால், நேற்று அமைச்சர் அங்கே, அந்த 'காம்பவுண்டு'க் குள்ளே, கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார். அதோடு, என்னை வரவிடாமல் தடுப்பதற்கு முயற்சி நடந்திருக்கிறது. நான் அதை மீறி வந்திருக்கிறேன், என்று பேசியிருக்கிறார். இருக்கிற விதிகளை மீறி இது நடைபெற்றிருக்கிறது. 'எஸ்டாபிளிஷ்ட் நார்ம்ஸ் அன்ட் சர்வீஸ் ரூல்ஸ்'—ஐ மீறி அதைக் கட்சித் தேர்தல் மாதிரியாகவே பாவித்திருக்கிறார்கள் அந்தக் கண்ணோட்டத்தோடு தாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். ஆனால் தங்களைச் சார்ந்தவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே, தாங்கள் ஒரு 'எர்லி டேட்' போட்டு, லீடர் ஆப் தி ஹவுஸ் இங்கே இருக்கிறார்; நாளைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும். அப்படி எடுத்துக்கொள்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனை செய்து சொல்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : பரிசீலனை செய்து இல்லையென்று சொல்லாமல், விவாதத்திற்கு தாங்கள் நேரம் குறிப்பிடவேண்டும். ஏனென்றால், முக்கியமான பிரச்னையை சுப்பு அவர்கள் எழுப்பியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவருடைய யோசனையும் பரிசீலிக்கப்படும்.

(6) வரவு செலவுத் திட்டம் 1979—80 தொடர்ச்சி.

பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, 1979—80—ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது என் கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். நெல்லை மாவட்